

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஐக்கிய அரபு அமீரகத்தில் 21.11.2025 முதல் 30.11.2025 வரை நடைபெறவுள்ள உலக சீனியர் கிக் பாக்சிங் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கவுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 11 வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து தலா 1.75 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 19.25 லட்சம் ரூபாய்க்கான காசோலையை நேற்று (5.11.2025) வழங்கி கலந்துரையாடினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர்.அசோக் சிகாமணி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2025) பாரா வாள்வீச்சு வீராங்கனை செல்வி ஷராந்தி தாமஸுக்கு சர்வதேச போட்டியில் பங்கேற்க தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 1,64,500 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர்.அசோக் சிகாமணி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருச்செங்கோட்டில்

# ரூ.23 கோடியில் மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவமனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 6 – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 23 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் நான்கு தளங்கள் கொண்ட புதிய மருத்துவக் கட்டடம் கட்டப்பட்டு, 225 படுக்கை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட திருச்செங்கோடு அரசு மருத்துவமனையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் "மக்களைத் தேடி மருத்துவம் சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் "இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும்48 போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக அரசு செயல்படுத்தி வருகிறது.

**மேம்படுத்தப்பட்ட திருச்செங்கோடு அரசு மருத்துவமனை!**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 728 வெளிநோயாளிகள், 117 உள்நோயாளிகள், மாதத்திற்கு 105 பிரசவங்கள், 13,691 ஆய்வக பரிசோதனைகள், 677 USG Scan மற்றும் 204 பெரிய அறுவை சிகிச்சைகள் மற்றும் 707 சிறிய அறுவை சிகிச்சைகள் நடைபெற்று வருகிறது.

மே 2021ல் இவ்வரசு பொறுப்பேற்ற பின், திருச்செங்கோடு பகுதி மக்களின் நலன்கருதி, திருச்செங்கோடு அரசு மருத்துவமனையை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தும் பொருட்டு 2023ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதன்படி, 23 கோடி ரூபாய் செலவில் தரைத்தளத்துடன் கூடிய நான்கு தளங்களுடன் புதிய மருத்துவக் கட்டடம் கட்டப்பட்டு, இக்கட்டடத்தின் தரைத்தளத்தில் புறநோயாளிகள் பதிவு சீட்டு வழங்குமிடம், 8 படுக்கைகள் கொண்ட தலைக்காய சிகிச்சை பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு மற்றும் நோய் பகுப்பு பிரிவு மருந்தகம், ஊசி போடும் இடம் பல் மருத்துவப் பிரிவு, தொற்றாநோய் பிரிவு, மருத்துவர் அறையும், முதல் தளத்தில்மகப்பேறுதாய்மார்கள்புறநோயாளிகள் பிரிவு, குழந்தைகள் புறநோயாளிகள் பிரிவு, பிரசவித்த தாய்மார்கள் பாலூட்டும் அறை, தடுப்பூசி மையம், அறுவை சிகிச்சைக்கு முன் மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு பிரிவுகள், கண் சிகிச்சைப் பிரிவு, முதலமைச்சரின் காப்பீட்டு பிரிவு, எக்ஸ்ரே, ஆய்வகம், நுண்கதிர் ஆகியவையும், இரண்டாவது தளத்தில் எலும்பு முறிவு அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிப்பு பிரிவு, பிரசவத்திற்கு பின் கவனிப்பு வார்டு, மருத்துவர் அறை, செவிலியர் அறையும், மூன்றாவது தளத்தில் குழந்தைகள் நலப்பிரிவு 1 மற்றும் 2, பிரசவ அறை, பிரசவத்திற்குப் பிந்தைய பிரிவு, USG Scan அறை, பிரசவத்திற்கு அவசர சிகிச்சை பிரிவும், நான்காவது தளத்தில் பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு நிலை 1,2 மற்றும் 3, தாய்ப்பால் வங்கி, மயக்கவியல் நிபுணர் அறை, அறுவை அரங்கம், மயக்கவியல், செவிலியர் அறை ஆகிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கூடுதல் கட்டடத்தின் அடிப்படையில் 150 படுக்கைகள் அதிகரித்து, 225 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட திருச்செங்கோடு அரசு மருத்துவமனையை முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண் தம்புராஜ் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் திட்ட இயக்குநர் மரு சு.வீனித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர். ஈஸ்வரன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு. த.க.சித்ரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும்

# 363 மாணவர்களுக்கு ஊக்கத்தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ.6- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர், ஓதுவார், தவில் மற்றும் நாதஸ்வரம், திவ்ய பிரபந்த பாடசாலை மற்றும் வேத ஆகம பாடசாலை ஆகிய 18 பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாக பயிற்சி பெறும் 297 மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை ரூ.10,000/ மற்றும் பகுதி நேரமாக பயிற்சி பெறும் 66 மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத் தொகை ரூ.5,000/ ஆகியவற்றை வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகைக்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார்.**

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல், சமூக நோக்கத்தோடு செயல்படும் அறநிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில், திருக்கோயில்கள் சார்பில் கல்வி நிறுவ னங்கள், பயிற்சி பள்ளிகள், கருணை இல்லங்கள், மூத்த குடிமக்களுக்கான உறைவிடங்கள், மன நலக் காப்பகம், மருத்துவ மையங்கள் போன்றவை நடத்தப்பட்டு வருகின்றன.

திருக்கோயில்கள் சார்பில் 6 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள், 6 ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள், 3 தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளிகள், 2 வேத ஆகம பாடசாலைகள், ஒரு திவ்ய பிரபந்த பாடசாலை என 18 பயிற்சிப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் மாதந்தோறும் ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2022 ஆம் ஆண்டுவரை முழுநேரமாக பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1,000/மும், பகுதிநேரமாக பயிலும் மாணவர்களுக்கு ரூ.500/மும் வழங்கப்பட்டு வந்தது. 2022 – 2023 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி, முழுநேரம் மற்றும் பகுதிநேரம் பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை முறையே ரூ.3,000/ மற்றும் ரூ.1,500/ ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க முன்னோடி திட்டத்தை கொண்டுவந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கடந்த 24.11.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத் தொகை முறையே ரூ.4,000/ மற்றும் ரூ.2,000/ ஆக உயர்த்தி வழங்கினார்.

2025 – 2026 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில், "அனைத்து பயிற்சிப் பள்ளிகளில் முழுநேர வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக 2022ஆம் ஆண்டு வரை ரூ.1,000/ வழங்கப்பட்டு வந்தது. 2023ஆம் ஆண்டு முதல் ரூ.3,000/ஆகவும், 2024 ஆண்டு முதல் ரூ.4,000/ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த ஆண்டு முதல் ரூ.10,000/ ஆக உயர்த்தி வழங்கப்படும். அனைத்து பயிற்சிப் பள்ளிகளில் பகுதி நேர வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக 2023ஆம் ஆண்டு முதல் ரூ.1,500/ ஆக வழங்கப்பட்டு வந்ததை, 2024ஆம் ஆண்டு முதல் ரூ.2,000/ஆக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் ரூ.5,000/ ஆக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர், ஓதுவார், தவில் மற்றும் நாதஸ்வரம், திவ்ய பிரபந்த பாடசாலை மற்றும் வேத ஆகம பாடசாலை ஆகிய 18 பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாக பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை ரூ.10,000/ மற்றும் பகுதி நேரமாக பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை ரூ.5,000/ க்கான வங்கி வரைவோலைகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று வழங்கினார்.

இதன்மூலம் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாக பயிற்சி பெறும் 297 மாணவர்கள், பகுதி நேரமாக பயிற்சி பெறும் 66 மாணவர்கள் என மொத்தம் 363 மாணவர்கள் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் முனைவர் துரை. இரவிச்சந்திரன், திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி

# சி.எஸ்.ஐ. வெஸ்லி தேவாலயம் ரூ. 85 லட்சம் மதிப்பில் புனரமைப்பு பணி!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் நவ 06; தமிழ்நாடு அரசின் தொன்மையான தேவாலயங்கள் புனரமைப்பு திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சிஎஸ்ஐ வெஸ்லி தேவாலயத்தை புனரமைக்க ரூ. 85 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து புனரமைப்பு பணி தொடக்க விழா மற்றும் நல திட்டங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு சென்னை பேராயர் பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஜெயசீலன் ஞானாதிக்கம், செயலாளர் அகஸ்டின் பிரேம் ராஜ், பொருளாளர் சாமுவேல் கொர்னெலியஸ், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரும், திமுக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாநில இணை செயலாளருமான சி.ஜெரால்டு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு புனரமைப்பு பணியினை தொடங்கி வைத்து, பல்வேறு நலத்திட்டங்களை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் தொன்மையான ஆலயங்களின் புனரமைப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு பூந்தமல்லி சிஎஸ்ஐ வெஸ்லி தேவாலயத்தை புனரமைக்க ரூ. 85 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து திருநங்கைகள் ஏழை எளிய பொதுமக்கள் பார்வையற்றோர்கள் விடுதி பள்ளி மாணவ மாணவிகள் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்

இதில் மாவட்ட கலெக்டர் மு.பிரதாப், பூவிருந்தவல்லி ஆ.கிருஷ்ணசாமி, நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை, நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் க.ஸ்ரீதர், ஆயர் மற்றும் தலைவர் சி.ஆர். சாம்சங் ராஜா, ஆயர் கே. கௌசல்யா சாம்சன், ஜோயல் எஸ்.டேவிஸ், பொருளாளர் மா.அசரியா ஸ்காட் இர்வின் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை, ஈ.வி.கே.சம்பத் மாளிகையில் தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரிய அலுவலக கட்டிட மறுசீரமைப்பு பணிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் ஆய்வு செய்தார். உடன் அயலகத் தமிழர் நல வாரிய ஆணையர் வள்ளலார் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

### துணை மேயர் மு.மகேஷ்குமார் தலைமையில் ! இரா.துரைராஜ் – எம்.கிருஷ்ணமூர்த்தி – வே.ஆனந்தம் முன்னிலையில்

# சைதை 169 -வது வட்ட துணைச் செயலாளர் துரைசரவணன் மகள் மணவிழா வரவேற்பு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள் வாழ்த்து!

சென்னை, நவ.6- சைதை கிழக்குப் பகுதி 169-வது வட்டக் கழக துணைச் செயலளார் .துரை.சரவணன் - மேனகா ஆகியோரது புதல்வி ச.சங்கீதா பல்லாவரம், வேம்புலி அம்மன் கோவில் தெருவில் வசிக்கும் மாரிமுத்து - ஜெயபாரதி ஆகியோரது புதல்வர் மா.கார்த்திக் ஆகியோரது திருமணம் வரவேற்பு நிகழ்ச்சி 8 - 11 - 2025 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு சின்னமலை, செயின்ட் தாமஸ் கம்யூனிட்டி ஹாலில் நடைபெறுகிறது.



பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார் தலைமை தாங்குகிறபார். பகுதிச் செயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.சி., எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வேளச்சேரி மேற்கு பகுதிச் செயலாளர் வே.ஆனந்தம் எங்.சி., சைதை கருணாகிட்டு, மு.ஆரோக்கியம், எல்.ஆரோக்கியராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டப் பிரதிநிதி இரா. சுதாபிரியன், ஆர்.சேகர் (மு.வ.செ.), வட்ட நிர்வாகிகள் அ.ஆரி, சைதை ஆ.விக்டர், மு.சந்திரா, மை.அருள்ராஜ், வி.என்.செல்வமணி, சூரியன், கே.பிரபு, அ.ஆனந்தராஜ், ஆ.பரணி ஆகியோர் வரவேற்கின்றனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எங்.பி., எம்.எல்.ஏ.க்கள் ப.தாயகம்கவி , ச.அரவிந்த்ரமேஷ் , காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, ஹசன் மௌளானா மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், வேளச்சேரி பி.மணிமாறன் , பாலவாக்கம் க.சோமு, மாவட்ட நிர்வாகி கள் சைதை எஸ்.குணசேகரன். பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி எஸ். பாஸ்கர்,

பகுதி கழகஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன், மு.இராசா, எஸ்.வி.இரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், துரை கபிலன், தெம்பு: ராஜன், அ.ம. துரை, வீரமணி, ஜி.வெங்கடேசன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் : மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன்/C, மின்னல் கந்தப்பன், களக்காடி எல்லப்பன், தா.மோகன்குமார் எம்.சி.,

பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு. பாக்கியலட்சுமி, அருணகிரி, த.சம்பத், ஆர்.ரமேஷ், வி.பி. ஜானகிராமன், கவிதா கௌதமன் அணிகளின் நிர்வாகிகள் சைதை சாதிக், கோட்டூர் பிரகாஷ், ஆர்.கிருஷ்ணகுமார், ந.மணிகண்டன், அஞ்சல் ராமன், கோ.பாஸ்கரன்

வட்ட செயலாளர்கள் ந.ராதாகிருஷ்ணன், சைதை ஆ.வரதன், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ். பாட்சா, வே.முருகன், சைமு. சேகர், அட்கோ கமலநாதன், ந.தமிழரசு, எம்.நாகா, எஸ். பி.கோதண்டம் மாவட்ட பிரதிநிதிகள்

டி.வி.நரசிம்மன், ச.சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், சைதை ஏ.மஜீத், எஸ்.ஜெ.சலாம், எஸ்.ரவி, க.உமாபதி, ஜி.யோவான், வெ.ரமேஷ்குமார், கே.எம். எஸ்.கணேசன், கோட்டூர் ந. பாபு, மு.மகேஷ்குமார் லாரன்ஸ், டி.என்.சிவமணி, ஜி. கே.ராமச்சந்திரன், பொன். ஜெய்சிங்க், பால்கார் ரவி, ஆர். எல்.காந்தன் வட்ட நிர்வாகிகள்

வே . கோ த ண் ட ம் , சொ.முருகையன், டி.கண்ணன், எம்.சாந்தி, பா.செல்ல பாண்டியன், கேபிள் சம்பத், கே.பி.மகேஷ், எம்.பாபு, ஏ. எஸ்.ரியாஸ் அகமது மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.



சோழிங்கநல்லூர் தொகுதி 188–வது வார்டு மடிப்பாக்கத்தில் பொது மக்களின் புகாரின் அடிப்படையில் துறை சார்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களுடன் ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார், இந்த பகுதியில் மழைநீர் வடிகால்வாயை தூர்வார வேண்டும், மழைநீர் வடிகால்வாயில் தேங்கியிருந்த கழிவுகளை அகற்றப்பட வேண்டும், மற்றும் ஆபத்தான முறையில் இருந்த மின்சார கேபிள்களையும் சரி செய்ய வேண்டும். மற்றும் இந்த பகுதியில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் உள்ளன. ஆனால் 1500 வீடுகள் மட்டும் பாதாள சாக்கடை இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளுக்கு உடனடியாக நாளைய தினம் வீடு வீடாகச் சென்று இந்த திட்டத்தைப் பற்றி பொது மக்களுக்கு எடுத்துரைத்து இந்த திட்டத்தில் அவர்களை உடனடியாக சேர்க்க வேண்டுமென அதிகாரிகளிடம் கூறினார். உடன் சமீனா செல்வம் எம்.சி. வட்ட செயலாளர் சுரேஷ் உள்ளிட்ட மாநகராட்சி அரசு அதிகாரிகள் அனைவரும் உடனிருந்தனர்.